புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2023** **19 மே 2023**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி, இதயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 19 ஆம் ஆண்டு விழா இன்று (19-05-2023) நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாண்புமிகு புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் குத்து விளக்கேற்றி விழாவை துவங்கி வைத்தார். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. N. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர். செல்வம், சுப்பீரியர் ஜெனரல் மதர் ஜெய மேரி, புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பொறுப்பு இயக்குனர் டாக்டர் கே. தரணிக்கரசு, புதுச்சேரி பல்கலைக்கழகம் மனிதவள பயிற்சி மையத்தின், பொறுப்பு இயக்குனர் டாக்டர் பாஞ். ராமலிங்கம், புதுச்சேரி பாரதிதாசன் அறக்கட்டளை தலைவர் கலைமாமணி டாக்டர் பாரதி, கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலாளர் டாக்டர். ஏ. பாத்திமா, கல்லூரி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். விழாவில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்,

- முதலில் இந்த கல்லூரியில் உள்ள பெண்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நீங்கள் இந்த விழாவை சிறப்பாக மாற்ற வேண்டும் என்று சிரமப்பட்டு செய்த ஒவ்வொரு செயல்களும் பாராட்டுக்குரியது. நீங்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் இல்லை என்பதை இது காண்பிக்கிறது.
- மேலும் இந்த கல்லூரியில் உள்ள ஒவ்வொரு துறையும் இதழ்களை வெளியிட்டுள்ளது. அதற்காக என் பாராட்டுக்கள். ஏனென்றால், அதில் சில கட்டுரைகளை மாணவர்களும் எழுதியுள்ளனர். இந்த செயல் மாணவர்களின் எழுத்து திறனை மேம்படுத்துவதற்கு ஒரு பயிற்சியாக அமையும். இது சிறப்பாக அவர்களை மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் திறனை மேம்படுத்தும். மேலும் அந்த இதழ்களில் போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் மாணவர்கள் எப்படி வாழ வேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.
- இங்கே பல விதங்களில் தங்களது திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் இந்த கல்லூரிக்கும் எனது வாழ்த்துக்கள்.

- முதன்முதலில் பெண்களுக்காக துவங்கப்பட்ட கல்லூரிகளில் இதுவும் ஒன்றாக இருப்பதோடு சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கும் இந்த கல்லூரிக்கு பாராட்டுக்கள்.
- இந்திய நாடானது பெருந்தொற்றின் பாதிப்பிலிருந்து வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.
- நம் பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தொழில் முனைவோருக்காக 'ஸ்டார்ட் அப் இந்தியா', 'மேக் இன் இந்தியா' போன்ற திட்டங்களை ஏற்படுத்தி இருக்கிறார். அதனை பயன்படுத்தி நீங்கள் வாழ்வில் முன்னேற வேண்டும்.
- இந்தியாவில் நிறைய 'ஸ்டார்ட் அப்புகள்' உருவாகி அதன் மூலம் 75 ஆயிரம் தொழில் முனைவோர்கள் உருவாகி இருக்கிறார்கள். ஆனால் அதில் ஆண்கள் 84% விழுக்காடும் பெண்கள் 16% விழுக்காடும் இருக்கிறார்கள்.
- இதில் புதுச்சேரி இதயா கல்லூரி பெண்கள் அதிகமாக பங்கேற்று தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டும்.
- பெண்கள் ஏறக்குறைய கல்வி சுதந்திரத்தை பெற்று விட்டோம். ஆனால் நாம் ஏன் தொழில் முனைவோர்களாக மாற வேண்டும் என்றால் பொருளாதார சுதந்திரம் பெண்களுக்கு இருக்க வேண்டும்.
- இப்போது இந்திய பொருட்களுக்கு உலக சந்தையில் பெரும் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.
- எனவே புதிது புதிதாக சிந்தியுங்கள். இன்று பெரிதளவில் இயங்கிக் கொண்டிருக்கும் 'சுவிகி' மற்றும் 'ஓலா' நிறுவனங்கள் சிறிதாகவே துவங்கப்பட்டவைகளே. ஆனால் இன்று சமூகத்தில் அவைகளின் பங்கானது முக்கியமானதாக இருந்து வருகிறது.
- நீங்கள் தடைகளை கண்டு துவலக்கூடாது. தடைகள் வரும்போது அதனை நீங்கள் வாய்ப்புகளாக பார்க்க வேண்டும். எப்பொழுதும் உங்களது மகிழ்ச்சியை தொலைக்காதீர்கள். மதிப்பெண்கள் பற்றி அதிகம் கவலை கொள்ளாதீர்கள். ஆனால் அதே நேரம் வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்கிற எண்ணம் நீங்கள் அனைவரும் கொண்டிருக்க வேண்டும்.
- "ஓடிக்கொண்டிருக்கும் நதி நிறுத்தப்படும் போது தான் மின்சாரம் கிடைக்கும். உளி கல்லை அடித்தால் தான் சிற்பமாக மாறும்". அதைப்போல ஆசிரியர்கள் உங்களை நல்வழிப்படுத்த சில நேரங்களில் கண்டிக்க வேண்டிய தேவை இருக்கலாம். ஆசிரியரின் உதவி இல்லாமல் நம் வாழ்க்கையில் யாரும் முன்னேறி விட முடியாது.
- மேலும் நீங்கள் இந்த கல்லூரியில் படிக்கிறீர்கள் என்றால் அதற்கு உங்கள் பெற்றோர்களின் தியாகங்கள் இருப்பதை நீங்கள் உணர வேண்டும். அதனால் அவர்களை நீங்கள் மதிக்க வேண்டும்.
- பிரச்சனையின் போது துவண்டு போகாமல் ஏற்படும் தடைகளை எதிர்க்கக் கூடிய தன்னம்பிக்கை உங்கள் அனைவரிடமும் இருக்க வேண்டும்.

- படித்த பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும். பெண்கள் அரசியலுக்கு வந்து முன்னேறுவது சுலபமல்ல. அங்கே சவால்களும் சிக்கல்களும் மிக அதிகம். அவைகளை மீறி பயணிக்கும் தன்னம்பிக்கை இருந்தால் தான் உங்களால் வெற்றி காண முடியும்.
- அதைப்போலவே தமிழையும் ஆன்மீகத்தையும் நாம் வளர்க்க வேண்டும்.